# பொதுக்காலம் 22ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

பொதுக்காலம் 22ஆம் ஞாயிறு திருப்பலியில் பங்குபெற்று இறையாசீர் பெற வந்திருக்கும் அன்பான இறைமக்களை இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் வாழ்த்துக் கூறி, வரவேற்கிறோம்.

செல்வம், செல்வாக்கு, பணம், பதவி, பகட்டு என்று எல்லாவற்றையும் நாம் நிறைவாய்ப் பெற்றிருந்தாலும் இறைவனின் திருவுளப்படி வாழவில்லையென்றால் அது வாழ்வாகாது; வாழ்ந்தும் பயனில்லை என்ற ஒரு அரிய வாழ்க்கைத் தத்துவத்தை இன்றைய திருப்பலி வாசகங்கள் நமக்குத் தெளிவாய் எடுத்துரைக்கின்றன.

இறைவாக்கினர் எரேமியாவையும் அவரது அழைப்பையும் மக்கள் எள்ளி நகையாடிய போதும் “உம் சொல் என் இதயத்தில் பற்றியெரியும் தீ போல இருக்கிறது” என்றுரைத்து, கடவுளின் திருவுளப்படி வாழ்வதில்தான் தனது வாழ்வு பாதுகாப்பு பெறுகிறது என்று எரேமியா உணர்ந்து வாழ்ந்தார்.

புனித பவுலடியார் கூறுவது போல் இறைவாக்கினர் எரேமியா தன்னையே இறைவனுக்கு உயிருள்ள பலியாக கையளித்து, வழிபாடு செய்ததின் பயனாக உலகப் போக்கை எதிர்த்து நிற்கவும், இறைவனின் திருவுளம் எது என்பதை தேர்ந்து தெளிந்து வாழவும் கற்றுக் கொண்டார்.

வரப்போகும் மெசியாவான இயேசு துன்பப்படுவதையோ கொல்லப்படுவதையோ புனித பேதுரு விரும்பவில்லை, அதனால்தான் “ஆண்டவரே இது வேண்டாம்” என்று மறுத்துரைத்தார். ஆனால் தன்னால் ‘பாறை’ என்று அழைக்கப்பட்ட பேதுருவை இயேசு, “என் கண் முன் நில்லாதே சாத்தானே!” என்று கடிந்துரைக்கிறார்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது மலர்களால் சூழப்பட்ட பாதையல்ல; முட்களும் கூரிய கற்களும் நிறைந்தவைதான். ‘நான்’, ‘எனது’ என்ற ஆணவப் போக்கினை விட்டொழித்து, உலகத்தின் செயல்களில் பேராசை கொள்ளாது, “நான் உம்மை உறுதியாகப் பற்றிக் கொண்டேன்” என்ற திருப்பாடலுக்கேற்ப இறைவனது திருவுளத்திற்கேற்ப தூய வாழ்க்கை வாழ, இக்கல்வாரித் திருப்பலியில் இறைவனிடம் வரம் கேட்போம்; வாழ்வு பெறுவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என்று ஆணையிட்ட எங்கள் இறைவா!

உமது ஆணையை சிரமேற்கொண்டு அருட்பணியாற்றும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரையும் உமது கருணைக் கண் கொண்டு நோக்கியருளும். அவர்கள் தம் இறைப்பணியைத் தொய்வின்றித் தொடரவும், நீர் வாழ்ந்து காட்டிய தூய, எளிய வாழ்க்கையில் அவர்களும் நிலைத்து நிற்கவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. 'நானும் தீர்ப்பிடேன் இனிப் பாவம் செய்யாதே' என்று நல்ல தீர்ப்பு வழங்கிய எம் இறைவா!

எங்கள் நீதியரசர்கள் நாட்டுத் தலைவர்களுக்கோ, அரசியல்வாதிகளுக்கோ அஞ்சாது நேர்மையோடு மனசாட்சியின் வழியில் செயல்பட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோதி காசி, தென்காசி.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com